## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII, Cr.P.C.)

# IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | STC – 861/2024 |
| Deposition of Witness | : | PW– 1 |
| Name | : | சண்முகம் |
| Father Name | : | சின்னசாமி |
| Village | : | முத்தூர் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 58 |

Accused Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 12.03.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது முத்தூரில் குடியிருந்து வருகிறேன். சுமார் ஒன்றரை வருடத்திற்கு முன்பு 24 ஆம் தேதி மாதம் சரியாக ஞாபகம் இல்லை. முத்தூர் – நத்தக்காடையூர் செல்லும் ரோட்டில் கீழே கிடந்த தேங்காயை எடுக்க ரோட்டின் ஓரமாக எனது இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு நடந்து சென்றபோது அதே ரோட்டில் எதிரே ஆஜர் எதிரி ஓட்டி வந்த தோஸ்த் வாகனமானது அதிவேகமாக வந்து என் மீது மோதிவிட்டது. விபத்தில் எனக்கு கையின் கட்டைவிரலில் பலத்த அடிபட்டு தையல் போடப்பட்டுள்ளது. பின்னர் நான் எனது மருமகனுக்கு தகவல் சொல்லி வரசொன்னேன். அவர் தனியார் ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லச்சொல்லி அதன் மூலம் முத்தூரில் உள்ள சிஎம்சி மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார். பின்னர் வெள்ளகோவில் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் அடுத்த நாள் மேல் சிகிச்சைக்காக ஈரோடு பரணி மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக ஒருவாரம் சிகிச்சையில் இருந்து பின்னர் வீடு திரும்பிவிட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் எனக்கு எழுதப்படிக்க தெரியாது. நான் கண்ணாடி எத்தனை வருடமாக அணிந்துவருகிறேன் என்றால் 15 வருடங்களாகவே

அணிந்துவருகிறேன். எனக்கு பார்வைகுறைபாடு 15 வருடமாகவே உள்ளது என்றால் சரிதான். விபத்து குறித்து போலீசார் என்னிடம் புகார் கொடுக்குமாறு கூறினார் என்றால் சரிதான். அ.சா.ஆ.1 பற்றி போலீசார் என்னிடம் என்ன எழுதவேண்டும் என்றும், என்ன குறிப்பிடபடவேண்டும் என்றும் கூறினார் என்றால் சரிதான். புகாரை யார் எழுதினார் என்றால் எனது அண்ணன் மகன் எழுதினார். புகாரை யார் எழுதினார் என்று புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரை எப்போது கொடுத்தேன் என்றால் 25.06.2024 ஆம் தேதியன்று கொடுத்தேன். நான் நத்தக்காடையூர் – முத்தூர் செல்லும் சாலையில் மேற்கில் இருந்து கிழக்காக வந்துகொண்டிருந்தேன் என்றால் சரிதான். விபத்து நடந்த பகுதியானது மேற்கில் இருந்து கிழக்காக வரும்போது இறக்கமான பகுதி என்றால் சரிதான். விபத்து நடந்த பகுதியானது கிழக்கில் இருந்து மேற்காக செல்லும் சாலை நல்ல மேடான பகுதி என்றால் சரிதான். பாலத்தில் இருந்து கிழக்கே செல்லும் முத்தூர் சாலையின் மையப்பகுதியில் வெள்ளைக்கோடு இடைவிடாமல் போடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் ெஹல்ம்ட் அணிவில்லை என்றால் சரிதான். எனது xl வாகனத்திற்கான பதிவு சான்றிதழை போலீசாரிடமும் மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களிடமும் சமர்ப்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். விபத்தானது கிழமேல் சாலையில் தென்புறத்தில் நடந்துள்ளது என்றால் சரிதான். தேங்காய் மேற்படி சாலையின் தென்புறத்தில் இருந்தது அதை எடுத்துப்போட்டு விட்டு எனது XL ல் அதே மேற்படி சாலையில் தென்புறத்தில் மேற்கிலிருந்து கிழக்காக வந்தேன் என்றால் சரிதான். விபத்து நடந்தவுடன் நான் மருத்துவமனை சென்று முதலுதவி சிகிச்சை பெறவில்லை என்றால் சரிதான். போலீசார் என்னிடம் என்மீது தவறு உள்ளது என்றும் இழப்பீடு பெறவேண்டும் என்றால் சிகிச்சைக்கு சென்று சேருமாறு கூறினார்கள் என்றால் சரியல்ல. நான் 25.06.2024 ஆம் தேதியன்று இரவு 11.00 மணியளவில் சிகிச்சைக்கு சென்று சேர்ந்தேன் என்றால் சரிதான். அதன் பின்னிட்டு ஒரு வார காலம் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். விபத்திற்கு பின்னிட்டு விபத்து நடந்த பகுதிக்கு ஒரு மாத காலம் கழித்து தான் சென்றேன். விபத்து நடந்த மறுநாள் விபத்து நடந்த பகுதிக்கு செல்லவில்லை என்றால் சரிதான். நான் விபத்து நடந்த பகுதியை எந்த போலீசாரிடமும் அடையாளம் காட்டவில்லை என்றால் சரிதான். நான் முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாமலும் பார்வைக்குறைபாடு காரணமாகவும் XL வாகனத்தை

ஓட்டத்தெரியாமலும் சாலையின் தென்புறம் சென்று விபத்தை வழிய ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி ஓட்டி வந்த வாகனம் சரியான பாதையில் மோட்டார் வாகன சட்டங்களை பின்பற்றி சாலையின் இடதுபுறத்தில் மெதுவாக வந்தார் என்றால் சரியல்ல. விபத்து இழப்பீடு பெற வேண்டி பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. விபத்திற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.12 19:08:33 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII, Cr.P.C.)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | STC – 861/2024 |
| Deposition of Witness | : | PW– 2 |
| Name | : | வெங்கடாச்சலம் |
| Husband Name | : | பழனிச்சாமி |
| Village | : | திட்டுப்பாறை |
| Taluk | : | காங்கயம் |
| Age | : | 36 |

Accused present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 12.03.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது திட்டுப்பாறையில் குடியிருந்து வருகிறேன். கடந்த 24.06.2024 ஆம் தேதியன்று முத்ததூர் – நத்தக்காடையூர் ரோட்டில் குட்டப்பாளையம் பாலத்திற்கு அருகே எனது மாமனார் ரோட்டில் அவர் ஓட்டிவந்த XI வாகனத்தை நிறுத்தி விட்டு ரோட்டில் கிடந்த தேங்காயை எடுத்துஓரமாக போடும் போது எதிரே வந்த தோஸ்த் வாகனம் எனது மாமனாரின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. அதில் எனது மாமனாருக்கு தலை மற்றும் கை கட்டை விரலில் காயம் ஏற்பட்டது. இதுகுறித்து எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார், 25.06.2024 ஆம் தேதியன்று சி.எம்.சி மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சை அளித்தோம். மேல்சிகிச்சைக்காக ஈரோடு பரணி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். பத்து நாள்கள் எனது மாமனார் மருத்துவமனையில் தொடர் சிகிச்சையில் இருந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

விபத்தினைப் பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரிதான். போன்மூலம் தகவல் சொன்னதன்பேரில் மட்டுமே எனக்கு தெரியும் . வாகன விபத்து நஷ்ட ஈடு பெற வேண்டி அ.சா 1 கொடுத்த பொய்யான புகாருக்கு

ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து இழப்பீடா ரூபாய் 50,000/- அ.சா. 1 பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.12 19:08:43 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | STC – 861/2024 |
| Deposition of Witness | : | PW– 3 |
| Name | : | கோபால் |
| Father Name | : | வேலுச்சாமி |
| Village | : | பாப்பினி |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 33 |

Accused present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 12.03.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது பாப்பினியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 24.06.2024 ஆம் தேதியன்று மதியம் 2.00 மணியளவில் போலீசார் விபத்து நடந்த சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் சாட்சியாக இருக்கும்படி கேட்டார்கள். அதில் நானும் என்னுடன் வெங்காடச்சலம் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

அ.சா.1 மற்றம் அ.சா.2 எனது உறவினரா என்றால் அ.சா.1 எனது பெரியப்பா மற்றும் அ.சா.2 எனது மச்சான் முறையாவார்கள். நான் கையொப்பம் செய்ததாளில் என்ன குறிப்பிடப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் கேட்டுக்கொண்டற்கு இணங்க கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அ.சா 1 கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும்

சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தை யார் அடையாளம் காட்டினார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.03.12 19:08:52 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்